செ.வெ.எண் : 332 நாள் : 06.06.11

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், பதவியேற்ற அன்றே ஏழு முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு மேற்காணும் ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன் பெறும் பயனாளிகளுக்கு தற்போது வழங்கப்படும் 500 ரூபாய் மாத ஓய்வூதியத்தை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.5.2011 அன்று ஆணையிட்டார்கள்.

ஆதரவற்ற முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவையர், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், 50 வயது எய்தியும் வாய்ப்பு வசதியின்றி திருமணமாகாத உழைக்கும் திறனற்ற ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு சமூகப் பாதுகாப்பு அளித்து, அவர்களும் தங்கள் வாழ்வில் வளம் காண வேண்டும், அனைத்து நலன்களையும் பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி ஓய்வூதியத் தொகையை, 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் வழங்கும் திட்டத்தினை இன்று (6.6.2011) தொடங்கி வைத்து, ஏழு பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஒப்பளிப்பு ஆணையை வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்ட இந்த ஓய்வூதியத்தை இந்த மாதம் முதலே அனைவரும் பெறலாம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையினால் ஏறத்தாழ 23.65 லட்சம் பயனாளிகள் பயன் பெறுவார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெறுவதற்கான ஒப்பளிப்பு ஆணைகளைப் பெற்றுக் கொண்ட ஏழு பயனாளிகளும் தங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9

நாள்: 6.6.2011